**S.C.No.56/2023 PW3 – மோகன்ராஜ் 02.08.2025**

(1 ம் எதிரி சக்திவேல், 2 ம் எதிரி செல்வகுமார், 3 ம் எதிரி ரஞ்சித்குமார் ஆகிய 1 முதல் 3 எதிரிகள் ஆஜர்)

(குழந்தைகள் மற்றும் சாட்சிகள் விசாரணை மையத்திலிருந்து சாட்சி விசாரிக்கப்படுகிறார். எதிரிகள் திரைமறைவில் அமர வைக்கப்பட்டுள்ளனர். சாட்சி தனியறையில் அமர வைக்கப்பட்டு, திரை விலக்கப்பட்டு, விசாரணை கீழ்க்கண்டவாறு தொடரப்படுகிறது)

மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையின் உத்திரவு Crl.O.P.(MD) No.560 of 2025 நாள் 22.01.2025 சாட்சிகளை விசாரணை செய்ய உத்திரவிடப்பட்டு அதனடிப்படையில் சாட்சிகள் விசாரிக்கப்படுகிறார்.

ஆரம்பிக்கும் நேரம் **4.45** மணி

**1** ஆம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

உங்களுக்கு போனில் தகவல் சொன்ன பொன்னுச்சாமி என் உறவினர் என்றால் சரிதான். உங்கள் மாமாவின் மனைவி அ.சா.1 ரேவதியை போனில் எந்த இடத்திற்கு வரச்சொன்னீர்கள் என்றால் போனில் தகவல்தான் சொன்னேன், எந்த இடத்திற்கு வரவேண்டும் என்று சொல்லவில்லை, அவர்களை நான் காவல் நிலையத்தில் பார்த்தேன். நீங்கள் சொன்னதன் அடிப்படையில்தான் புகார் தயார் செய்யப்பட்டது என்று சொன்னால்

பொன்னுச்சாமிதான் சொன்னார். நீங்கள் கரூர் மருத்துவமனைக்கு சென்று உங்களது மாமா பாடி வந்துள்ளதா என்று யாரிடம் விசாரித்தீர்கள் என்றால் மருத்துவமனையில் உள்ள மார்ச்சருக்கு முன்னால் உள்ள அட்டெண்டரை கேட்டேன், அவர் சீருடையில் இருந்தார், அவரிடம் இருந்து என் மாமாவின் பாடி வரவில்லை என்று தெரிந்து கொண்டேன். நீங்கள் புகார் கொடுத்தபோது எதிரிகள் பற்றிய விபரங்கள் எதுவும் இல்லை என்றும், காவல் துறையினரிடம் வாக்குமூலம் கொடுத்தபோது பின்னர் விசாரித்த வகையில்தான் பெயரை தெரிந்து கொண்டதாக கூறியுள்ளீர்கள் என்றால் சரியல்ல. வழக்கில் நீங்கள் இறந்துபோனவரின் உறவினர் என்பதால் வழக்கிற்கு சாதகமாக பொய் சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல.

முடியும நேரம் 4.55

<u>**2** ஆம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

நீங்கள் இறந்துபோன ஜெகநாதனின் அக்கா மகன் என்றால் சரிதான். இறந்துபோன ஜெகநாதன் விவசாயம் செய்வதாக சொல்லிக்கொண்டிருக்கும் இடத்தில் உங்கள் தாயாருக்கும் பங்கு உள்ளது என்று சொன்னால் என் மாமா வாங்கிய சொத்திற்கு என் தாயாருக்கு பங்கு இல்லை, பூர்வீக சொத்தில் பங்கு உள்ளது, அதனை வாங்குவதற்கு என் தாயாருக்கு இஷ்டம் இல்லை. என் தாயார் திருமணத்திற்கு முன்பே சொத்தில் பாகம் வேண்டாம் என்று சொல்லிவிட்டோம். உங்கள் மாமா

சொத்துக்கள் எங்கு எங்கு உள்ளது என்றும், அதன் கிரசர் இல்லை என்று சொன்னால் சரியல்ல. என் மாமாவின் காடு எங்கு உள்ளது என்று எனக்கு தெரியும். நான் மாமாவின் காட்டிற்கு சின்ன வயதிலிருந்தே சென்று வருவேன். மாமாவின் காட்டிற்கு அருகாமையில் எத்தனை கிரசர் உள்ளது என்று உங்களுக்கு தெரியுமா என்றால் காட்டை ஒட்டியுள்ள இடம் இந்த கிரசர் ஆகும். உங்கள் மாமாவின் வீடும், தோட்டமும் ஒன்றாக உள்ளதா என்றால் வீட்டிற்கு பக்கத்தில் ஒரு தோட்டமும், கிரசர் பக்கத்தில் ஒரு தோட்டமும் உள்ளது. மாமாவின் தோட்டத்திற்கும், 2 ஆம் எதிரி செல்வகுமார் கிரசர் இருக்கும் இடத்திற்கும் தோராயமாக குறைந்தது 500 மீ. இடைவெளி இருக்கும் என்று சொன்னால் சரியல்ல, 300 மீ. இடைவெளி இருக்கும். உங்கள் மாமா கொடுத்த மனுவை நீங்கள் ஒன்றும் தயார் செய்து கொடுக்கவில்லை என்று சொன்னால் நான் தயார் செய்து கொடுக்கவில்லை. எந்த எந்த கிரசர் மீது மனு செய்திருந்தார் என்ற விபரம் உங்களுக்கு தெரியாது என்று சொன்னால் சரியல்ல, என் மாமா மனு கொடுத்த பிறகு அந்த மனுவை என்னிடம் காட்டியுள்ளார். 2019 ஆம் ஆண்டில் என் மாமா ஜெகநாதனை வாய்தகராறு ஏற்பட்டு அடிக்க முற்படும்போது பெரியசாமி வீட்டிற்கு சென்றுவிட்டார் என்று சொல்வது உங்கள் மாமா சொல்லிதான் தெரியும் என்று சொன்னால் சரிதான். உங்கள் மாமா மீதும், மற்றும் 2 ஆம் எதிரி செல்வகுமார் மாறி மாறி வழக்கு தொடுத்துக்கொண்டார்கள் என்று சொன்னால் சரிதான். உங்கள் மாமா எதிரி மேல் கொடுத்த வழக்கு குற்ற

எண்.106, எதிரி செல்வகுமார் என் மாமாமீது கொடுத்த வழக்கு குற்ற எண்.107 என்று எனக்கு தெரியாது. எதிரி செல்வகுமார் ஆட்கள் உங்கள் மாமா ஜெகநாதனை அடிக்க வந்த விபரத்தையும், மேலும் உங்கள் மாமா ஜெகநாதன் பெரியசாமி வீட்டிற்கு சென்ற விபரத்தையும் நீங்கள் காவல் துறையினர் விசாரணையில் சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. குவாரியால் பாதிப்பு உள்ளது என்றும் அதனை தடை செய்யவேண்டும் என்று உங்கள் மாமா மற்றும் பெரியசாமி கொடுத்த புகாரில் ஊர் பொதுமக்கள் கையொப்பம் இட்டு நீங்கள் காவல் துறையினர் விசாரணையில் குறிப்பிடவில்லை என்றால் கூறியதுபோல் நினைவு உள்ளது. கொடுத்த புகாரில் மேல் நடவடிக்கை எடுக்காததால் Environment Engineer பெட்டிசன் கொடுத்தற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று காவல் துறையினர் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. அதன் பிறகு 03.09.2022 ஆம் தேதியன்று முதலமைச்சருக்கும், கரூர் மாவட்ட ஆட்சியருக்கும் பதிவு தபால் மூலம் என் மாமா ஜெகநாதன் புகார்மனு அனுப்பினார் என்ற விபரத்தையும், அதன்பேரில் 08.09.2022 ஆம் தேதியன்று கலெக்டர் அலுவலகத்தில் இருந்து வந்து அன்னை புளூமெட்டல்ஸ் நிறுவனத்திற்கு சீல் வைத்தார்கள் என்று நீங்கள் முதல் விசாரணையில் கூறியதுபோல் காவல்துறை விசாரணையில் கூறவில்லை என்றால் தேதி சொல்லாமல் இருந்திருக்கலாம், ஆனால் இந்த விபரங்களை நான் காவல் துறையினரிடம் கூறியுள்ளேன். அடுத்த நாள் அதாவது

09.09.2022 ஆம் தேதியன்று மாமா ஜெகநாதனை கொங்கு மெஸ்சில் வைத்து சந்தித்தேன் என்றும், அப்போது எங்கள் மாமா என்னிடம் குவாரிக்கு சீல் வைக்கும்போது நான் அங்கு இருந்தேன் என்றும், நீ இருக்கும் வரை என்னால் குவாரி நடத்த இயலாது என்றும், என்னைக்கு இருந்தாலும் உன் சாவு என் கையில் தான் என்று கொலை மிரட்டல் விடுதத்தாக என் மாமா ஜெகநாதன் கூறப்படும் விபரத்தை நீங்கள் காவல் துறை விசாரணையில் சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. அந்த சமயத்தில் ஜெகநாதன் மாமாவுடன் பெரியசாமி இருந்தார் என்றும் தற்போது கூறுவதுபோல் காவல் துறை விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. நீங்கள் உங்கள் மாமாவிடம் நாங்கள் இருக்கோம், பார்த்துக்கிலாம் என்று சொன்னதுபோல் காவல்துறை விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியாக ஞாபகம் இல்லை. 10.09.2022 ஆம் தேதியன்று எனக்கு பொன்னுச்சாமி மாலை 5.30 போன் செய்து என் மாமா ஜெகநாதனை துாள் சண்முகம் காட்டு பக்கத்தில் அடித்துக்கொன்று இழுத்து சென்றுள்ளார்கள் என்று முதல் விசாரணையில் கூறியதுபோல் காவல் துறை விசாரணையில் கூறவில்லை என்று சொன்னால் சரியல்ல. நீங்கள் எத்தனை செல்போன் யூஸ் பண்ணியுள்ளீர்கள் என்றால் 4, 5 செல்போன் பயன்படுத்தியிருப்பேன். தற்போது என்ன போன் வைத்துள்ளீர்கள் என்றால் IPhone 12 ProMax செல்போன் வைத்துள்ளேன். ஆப்பிள் செல்போன்களுக்கும், மற்ற செல்போன்களுக்கும் OS (Operating System) வேறு வேறு என்றால் சரிதான், 1 ½ – 2 வருடமாக வைத்துள்ளேன்.

உங்களுக்கு இதற்கு முன்பாக என்னென்ன செல்போன் எந்த எந்த காலத்தில் வைத்துள்ளீர்கள் என்று ஞாபகம் உள்ளதா என்றால் இதற்கு முன்னால் Google Pixel 6 வைத்திருந்தேன். Google Pixel 6 அதில் 6, 6A, 7, 7A, 6A+5G என Google Pixel 9 வரை உள்ளது என்று சொன்னால் சரிதான். உங்கள் செல்போனில் எடுக்கும் பிச்சர் JPEG செட்டிங்கில் பதிவானதா அல்லது வேறு எந்த மென்பொருள் மீது பதிவானது என்றால் போட்டோ எடுத்தேன், அது என்ன பார்மெட்டில் சேவ் ஆனது என்று எனக்கு தெரியாது. Dell Laptop ல் 3540 Intel core முதல் 9000 Series வரை பல மாடல்கள் உள்ளன என்று சொன்னால் சரிதான். ஒவ்வொன்றும் Operating System வேறு வேறு என்று சொன்னால் இருக்கலாம். நீங்கள் செல்போனில் இருக்கும் போட்டைவை Laptop ல் பதிவேற்றி பார்க்கவேண்டும் என்றால் இரண்டிலும் ஒரே Software இருக்கவேண்டும் என்று சொன்னால் அவ்வாறு இருக்கவேண்டிய அவசியம் இல்லை. நீங்கள் எந்த Software பயன்படுத்தி பிச்சரை Decode செய்தீர்கள் என்றால் போனில் உள்ள விபரத்தை Bluetooth வழியாக போனில் பதிவு செய்தேன். அ.த.சா.ஆ.6 ல் உள்ள படங்கள் உங்களுடைய கேமராவில் எடுக்கப்பட்டதல்ல என்றும், Google Pixel 6 கேமரா தற்போது எங்கு உள்ளது என்றால் அந்த போன் தற்போது என்னிடம் இல்லை, அதை Exchange கொடுத்துதான் Iphone வாங்கினேன். நீங்கள் சொல்லும் மாதிரி உங்கள் போனில் புகைப்படம் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. நீங்கள் செல்வதற்கு முன்பாகவே சம்பவயிடத்தில் உள்ள உடல் காவல்

துறையினரால் ஆம்புலன்சில் ஏற்றப்பட்டு அனுப்பப்பட்டுவிட்டது என்றும், நீங்கள் சொல்வதுபோல் காவல் துறையினரால் எடுக்கப்பட்ட புகைப்படம் Bluetooth மூலமாக உங்கள் செல்போனுக்கு அனுப்பப்பட்டது என்றும், உங்களை சாட்சியாக ஆக்குவதற்காக காவல் துறையினர் செய்துள்ளார்கள் என்று சொன்னால் சரியல்ல. நீங்கள் புகைப்படம் எடுக்கவில்லை என்பதால்தான் சுற்றுப்புறம் இருந்த நபர்கள் மற்றும் ஆம்புலன்ஸ் ஆகியவற்றை புகைப்படம் எடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. அ.த.சா.ஆ.6 புகைப்படம் காவல் துறையினரால் ஒரு பகுதியில் இருந்து மட்டும் எடுக்கப்பட்ட புகைப்படம் என்று சொன்னால் சரியல்ல. நீங்கள் இந்த வழக்கை வலுப்படுத்தவேண்டும் என்பதற்காக இறந்த ஜெகநாதனின் உடன் பிறந்த சகோதரியின் மகன் என்பதற்காக இந்த வழக்கில் பயன்படுத்தப்பட்டுள்ளீர்கள் என்றும், அதனால்தான் பொன்னுச்சாமி என்னுடன் பயணிக்கும்போது வாந்தி எடுத்துவிட்டார் என்று புதிய தகவல்களை இந்த நீதிமன்றத்தில் முதன் முறையாக சொல்லியுள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல. காவல் துறையினர் உங்களை இரண்டு முறை விசாரித்தபோதும், நீதிமன்றத்தில் முதல் சாட்சியம் அளிக்கும் புதிய தகவல்கள் எதையும் தாங்கள் சொல்லவில்லை என்றால் சரியல்ல. நீங்கள் வருவதற்கு முன்னர் உடலை கைப்பற்றிய காவல் துறையினர் யாருடைய உடல் என்று அறியாத நிலையில் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்த பிறகு இந்த வழக்கில் எதிரிகள் மீது குற்றம் சுமத்த வேண்டும் என்பதற்காக குற்ற

நோக்கத்தை நிரூபிக்கும் வகையில் பின்யோசனை செய்து உங்களை சாட்சியாக போட்டிருக்கிறார்கள் என்றால் சரியல்ல. நீங்கள் சொல்வதுபோல் இது கொலை நிகழ்வு அல்ல என்றால் சரியல்ல. 65 பி சான்றிதழ் செல்லத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல.

முடியும் நேரம் **5.25** மணி

**3** <u>ஆம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

<u>நீதிமன்ற கேள்வி</u>

நான் பார்த்ததுபோல், புகைப்படம் எடுத்ததுபோல்தான் நீதிமன்றத்தில் அ.த.சா.ஆ.6 (4 வரிசை) ஆக உள்ளது, அதில் எந்தவொரு மாற்றமும் இல்லை.

முடியும் நேரம் **5.30** மணி

ஒம்/.K.H.இளவழகன்
முதன்மை மாவட்ட நீதிபதி,
கரூர்.

**S.C.No.56/2023** **PW 2** – பொன்னுச்சாமி **02.08.2025**

**(1 ம் எதிரி சக்திவேல், 2 ம் எதிரி செல்வகுமார், 3 ம் எதிரி ரஞ்சித்குமார் ஆகிய 1 முதல் 3 எதிரிகள் ஆஜர்)**

(குழந்தைகள் மற்றும் சாட்சிகள் விசாரணை மையத்திலிருந்து சாட்சி விசாரிக்கப்படுகிறார். எதிரிகள் திரைமறைவில் அமர வைக்கப்பட்டுள்ளனர். சாட்சி தனியறையில் அமர வைக்கப்பட்டு, திரை விலக்கப்பட்டு, விசாரணை கீழ்க்கண்டவாறு தொடரப்படுகிறது)

மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையின் உத்திரவு Crl.O.P.(MD) No.560 of 2025 நாள் 22.01.2025 சாட்சிகளை விசாரணை செய்ய உத்திரவிடப்பட்டு அதனடிப்படையில் சாட்சிகள் விசாரிக்கப்படுகிறார்.

ஆரம்பிக்கும் நேரம் **3.20** மணி

**1** ஆம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

குப்பம் கிராமம் உங்களுக்கு பூர்வீகம் என்பதால் அங்கு உள்ள குவாரிகளை பற்றிய விபரம் உங்களுக்கு தெரியும் என்று சொன்னால் சரிதான், அங்கு 7, 8 குவாரிகள் உள்ளது. அன்னை குவாரிக்கு வடக்கே ஓமேகா குவாரி உள்ளது என்றால் சரிதான். ஓமேகா குவாரிக்கு கிழக்கே மனோகர் குவாரி உள்ளது என்றால் சரிதான். மனோகரன் குவாரிக்கு கிழக்கே ராஜேஸ்குமார் குவாரி உள்ளது என்றால் சரிதான். ராஜேஸ்குமார்

குவாரிக்கு. கிழக்கே சுப்பிரமணிக்கு பாத்தியப்பட்ட குவாரி உள்ளது என்றால் அங்கு குவாரி உள்ளது யார் பெயரில் உள்ளது என்று தெரியாது. அந்த இடத்திற்கு கிழக்கே இறந்துபோன ஜெகநாதன் வீடு உள்ளது என்றால் சரிதான். இறந்துபோன ஜெகநாதன் வீட்டை சுற்றிலும் இறந்துபோன ஜெகநாதனின் விவசாய நிலம் உள்ளது என்றால் சரிதான். இறந்துபோன ஜெகநாதனின் வடகிழக்கே விநாயகா புளூமெட்டல்ஸ் என்ற நிறுவனம் உள்ளது. விநாயகா புளூமெட்டல்ஸ் குவாரி இருக்கும் இடம் இறந்துபோன ஜெகநாதன் விற்றுள்ளார் என்று சொன்னால் சரிதான், ஜெகநாதன் உட்பட மேலும் 10 நபர்கள் அவருக்கு நிலத்தை விற்றுள்ளார்கள். துாள் சண்முகம் இடம் குப்பம் - காருடையாம்பாளையம் செல்லும் பாதையில் இடையில் உள்ளது என்று சொன்னால் சரிதான். துாள் சண்முகம் நிலத்திலிருந்து குப்பம் கிராமத்திற்கு எவ்வளவு தொலைவு இருக்கும் என்றால் 3-4 கி.மீ., தொலைவு இருக்கும். குப்பத்திற்கு வடக்குபுறம் சென்றால் வேலாயுதம்பாளையம் எவ்வளவு தொலைவு இருக்கும் என்றால் 3 வழிகள் உள்ளது. சத்திரம் வழியாக சென்றால் 8 கி.மீ. இருக்கும், நொய்யல் வழியாக சென்றால் 13-14 கி.மீ. இருக்கும், மற்றொரு குறுக்குவழி உள்ளது, அதில் சென்றால் 13 கி.மீ. இருக்கும். துாள் சண்முகம் நிலத்திலிருந்து வேலாயுதம்பாளையம் செல்லவேண்டுமென்றால் சண்முகம் காட்டிற்கு வடக்கில் உள்ள ரோட்டில்தான் செல்லவேண்டும் என்று சொன்னால் சரிதான். துாள் சண்முகம் காட்டிலிருந்து காருடையாம்பாளையம் செல்ல எவ்வளவு

தொலைவு இருக்கும் என்றால் 2-3 கி.மீ. இருக்கும். காருடையாம்பாளையத்திலிருந்து கரூர் அரசு மருத்துவமனை எத்தனை கி.மீ. இருக்கும் என்றால் 30 கி.மீ. இருக்கும். கரூர் அரசு மருத்துவமனையிலிருந்து வேலாயுதம்பாளையம் அரசு மருத்துவமனை எத்தனை கி.மீ. இருக்கும் என்றால் எத்தனை கி.மீ. என்று எனக்கு தெரியாது. சுமார் 25-35 கி.மீ. இருக்கும் என்று சொன்னால் அந்த வழியில் அதிகமாக சென்றதில்லை, ஆகையால் தெரியாது. காவல் துறையினர் இரண்டு முறை விசாரித்தபோது எங்கே, எப்போது விசாரித்தார்கள் என்றால் அரசு மருத்துவமனை மற்றும் இறந்துபோன ஜெகநாதன் வீட்டிற்கு வந்து விசாரித்தார்கள். முதல் விசாரணையில் கரூர் மருத்துவமனையில் இருந்து காவல் நிலையத்திற்கு செல்லும்போது அ.சா.1 ரேவதி உடன் எத்தனை காவல்துறையினர் இருந்தார்கள் என்றால் அப்படி போகவில்லை. நீங்கள் கரூர் மருத்துவமனையில் இறந்துபோனவர் பாடியை பார்த்துவிட்டு அன்று இரவு காவல் நிலையம் சென்றதாக சொல்லியுள்ளீர்கள், அவ்வாறு செல்லும்போது அ.சா.1 ரேவதியுடன் எத்தனை நபர்கள் இருந்தார்கள் என்றால் ரேவதி காவல் நிலையம் வந்துவிட்டார். நிறைய கும்பல் இருந்தார்கள். அந்த நேரத்தில் உங்களை காவல் நிலையத்தில் வைத்து விசாரித்தார்கள் என்றால் ரேவதியைதான் விசாரித்தார்கள். காவல் துறையினர் உங்களை விசாரித்தபோது ஓட்டுநர் பெயரை பின்னால் கேட்டு தெரிந்துகொண்டீர்கள் என்று கூறியுள்ளீர்கள் என்று சொன்னால்

முன்னாடியே எனக்கு தெரியும். அ.சா.1 ரேவதி புகார் கொடுக்கும்போது அ.சா.1 ரேவதி கொடுத்த புகாரில் ஓட்டுநர் பெயர், விலாசம், கொடுக்கவில்லை என்று சொன்னால் நான் சொன்னேன். அந்த புகாரில் ஓட்டுநர் பெயர் விபரம் இல்லை என்று சொன்னால் நான் சொன்னேன், அதை எழுதினார்களா, இல்லையா என்று எனக்கு தெரியவில்லை. உங்களை காவல் துறையினர் மருத்துவமனையில் விசாரித்தபோது நீங்கள் ஓட்டுநர் பெயர் பின்னர்தான் பெயர், விலாசம் கேட்டு தெரிந்துகொண்டேன் என்று கூறியுள்ளீர்கள் என்று சொன்னால் ஞாபகம் இல்லை. வண்டி ஓட்டி வந்தவர் குண்டாக இருந்தாரா, ஒல்லியாக இருந்தாரா, வளத்தியாக இருந்தாரா என்ற விபரம் சொல்லவில்லை என்றால் அதை காவல் துறையினர் கேட்கவில்லை. நான் அதைப்பற்றி சொல்லவில்லை. உங்களுக்கு அந்த நேரத்தில் பெயர், விலாசம் தெரியாது என்றும், பின்னிட்டு ஜோடித்து சொல்லியுள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல, முதலில் அவர் பெயர் தெரியும். நீங்க சொல்லும் பெயருக்கும், அந்த நபருக்கும் என்ன சம்மந்தம் என்று உங்களிடம் அடையாள அணிவகுப்பு யாரும் நடத்தவில்லை என்று சொன்னால் எனக்கு ஏற்கனவே எதிரிகளை தெரியும். நீங்கள் குறிப்பிட்ட டிச்சு எத்தனை அடி ஆழத்தில், எத்தனை அடி அகலத்தில் இருக்கும் என்றால் சுமார் 2X2 அடி இருக்கும். டிச்சு ரோட்டிற்கு கிழபுறம், துாள் சண்முகம் காட்டிற்கு மேல்புறம் உள்ளது என்றால் சரிதான். நீங்கள் முதல் விசாரணையில் கூறியதுபோல் நீங்கள் எந்தவொரு சம்பவத்தையும்

பார்க்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. எதிரி சத்திவேல் வண்டியை ஓட்டிவரவில்லை என்றும், அவருக்கும், இந்த சம்பவத்திற்கும் எந்தவொரு சம்மந்தமும் இல்லையென்று சொன்னால் சரியல்ல. ஆம்புலன்ஸ்க்கு நான் தகவல் தெரிவிக்கவில்லை. ஆம்புலன்ஸ் ரோட்டின் வடபுறமாக சென்றதா, தென்புறமாக சென்றதா என்றால் பாடியை எடுத்துக்கொண்டு தெற்கு திசையில் சென்றது. நீங்கள் வேலாயுதம்பாளையத்திற்கு சென்றேன், கரூர் மருத்துவமனைக்கு சென்றேன், வாந்தி எடுத்த விபரங்களை தற்போதுதான் புதிதாக சொல்லுகிறீர்கள் என்றால் சரியல்ல, நான் வாந்தி எடுத்தேன். இறந்துபோன ஜெகநாதன் கீழே இறங்கி நின்றார் என்றும், வண்டி பனெட்மீது கிடந்தார் என்றும், வண்டியை மேலேயும், கீழேயும் வண்டி சென்ற விபரங்களை தற்போதுதான் புதிதாக நீதிமன்றத்தில் கூறுகிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல. வண்டியில் வந்தவர்கள் புளூமெட்டல்ஸ் என்ற நிறுவனத்தில் வேலை செய்கிறார்கள் என்று தற்போதுதான் புதிதாக சொல்லுகிறீர்கள் என்றும், வழக்கிற்காக பொய்யாக சொல்லுகிறீர்கள் என்றால் சரியல்ல.

முடியும் நேரம் **3.59**

<u>இரண்டாம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

காளிபாளையத்தில் உள்ள என் வீட்டிற்கும் ஜெகநாதன் வீட்டிற்கும் இடையே அரை கி.மீ. இருக்கும். தெற்கு, வடக்கிலும் பின்னர் திரும்பி கிழக்கேயும் செல்லவேண்டும். நீங்கள் காவல் துறையினர் உங்களை விசாரித்தபோது உங்களது கைபேசி எண்ணை கொடுத்தீர்கள் என்றால் கொடுக்கவில்லை. 11.09.2022 ஆம் தேதியிலும், இரண்டாவது தடவை 16.09.2022 ஆம் தேதிகளில் காவல் துறையினர் உங்களை விசாரித்துள்ளார்கள் என்றால் ஞாபகம் இல்லை. 7639283925 என்ற எண்ணுடைய போன் என்னுடையதான், காவல் துறையினர் விசாரணையில் குறிப்பிட்டுள்ளேன். தூள் சண்முகம் தோட்டம் என்பது தென்வடல் ரோட்டிற்கு கிழக்கே உள்ளது என்று சொன்னால் சரிதான். தூள் சண்முகம் தோட்டத்திற்கு வடக்கே குழிக்காடு சண்முகம் தோட்டம் என்று சொன்னால் தெரியாது. தூள் சண்முகம் தோட்டத்திற்கு தெற்கே ராமசாமி தோட்டம் உள்ளது என்றால் எனக்கு தெரியாது. தூள் சண்முகம் தோட்டத்திற்கு தென்வடல் ரோட்டை தாண்டி மேற்கே இருப்பது சென்றியப்பன் காளிதோட்டம் உள்ளது என்று சொன்னால் எனக்கு தெரியாது. தென்வடல் ரோடு வழியாக எப்போது போவதும், வருவதும் வழக்கம் என்றால் அதிகமாக அந்த வழியில்தான் செல்வேன். தூள் சண்முகம் உங்களுக்கு எத்தனை வருடமாக பழக்கம் என்றால் சிறுவயது முதல் பழக்கம். குப்பம் -

காருடையாம்பாளையம் செல்லும் ரோடு இரண்டு பக்கத்திலும் உள்ள மண்ணை அள்ளி ரோடு அமைத்துள்ளார்கள் என்று சொன்னால் முதலில் தார் ரோடு உள்ளது. மேற்சொன்ன ரோட்டை இருபக்கம் உள்ள மண்ணை அள்ளி ரோட்டை உயர்த்தினார்கள் என்று சொன்னால் சரியல்ல. குப்பம் - காருடையாம்பாளையம் ரோட்டிற்கும், துாள் சண்முகம் காட்டிற்கும் இடையே ஒரு பள்ளம் உள்ளது என்று சொன்னால் பள்ளம் இல்லை. ஜெகநாதன் இருசக்கர வாகனம் ஒரு குழியில் விழுந்து கிடந்தது என்றும், அந்த குழி எங்குள்ளது என்று சொன்னால் அது டிச்சு. மேற்படி டிச்சு எவ்வளவு நீளம் இருந்தது என்று தெரியுமா என்றால் ரோட்டிற்கு ஒருபுறத்தில் நெடுக்க உள்ளது. பொதுவாக டிச்சை தாண்டி கார், மற்ற வாகனங்கள் எதுவும் உள்ளே செல்லமுடியாது என்று சொன்னால் சரிதான். நீங்கள் பார்த்தபொழுது துாள் சண்முகம் காட்டிற்குள் ஜெகநாதன் குப்புற விழுந்து கிடந்ததாகவும், அந்த டிச்சை தாண்டி எவ்வளவு துாரம் தாண்டி விழுந்து கிடந்தார் என்றால் 30 அடி துாரம். நீங்கள் ஆம்புலன்ஸ் வந்து எடுத்து செல்வதற்கு முன் நீங்கள் எவ்வளவு நேரம் அங்கிருந்தீர்கள் என்றால் ஆம்புலன்ஸ் 10 நிமிடத்திற்குள் வந்துவிட்டது. உங்கள் போனில் இருந்து பெரியசாமிக்கு போன் செய்யும்போது, நீங்கள் பார்த்து எவ்வளவு நேரத்தில் கூப்பீட்டீர்கள் என்றால் 5-10 நிமிடத்தில் கூப்பிட்டிருப்பேன். அவரிடம் தகவல் சொன்னவுடன் ஆப் செய்துவிட்டேன். அதன் பிறகு மோகன்ராஜிடம் எவ்வளவு நேரம் கழித்து கூப்பீட்டீர்கள் என்றால்

இவருக்கு போன் செய்த பிறகு மோகன்ராஜ்க்கு கூப்பிட்டேன். எல்லாம் என் கையில் உள்ள போனில் இருந்துதான் கூப்பிட்டேன். ஏற்கனவே மோகன்ராஜ் நெம்பரும், பெரியசாமி நம்பரும் தெரியும். மோகன்ராஜ், பெரியசாமி ஆகியோர்கள் குவாரி எதிர்ப்பு இயக்கத்தினர் சங்கத்தில் தீவிரமாக இருந்தார்கள் என்றால் எனக்கு தெரியாது. ஆம்புலன்ஸ் எந்த திசையில் இருந்து வந்தது என்றால் தெற்கு திசையில் இருந்து வந்தது. 30 அடி தள்ளி கிடந்த உடலை எத்தனை நபர்கள் சேர்ந்து ஆம்புலன்ஸ்சில் ஏற்றினீர்கள் என்றால் அங்கு இருக்கிறவர்கள் ஏற்றிவிட்டார்கள். சிதறிக்கிடந்த உடலை எடுத்து ஆம்புலன்ஸ்சில் ஏற்றி வைக்க டிரச்சர் கொண்டு வந்தார்களா என்றால் டிரச்சரில்தான் ஏற்றினார்கள். டிரச்சரில் ஏற்றி வைத்து உடலை கொண்டுவர எவ்வளவு நேரம் ஆனது என்றால் ஆம்புலன்ஸ் வந்தது, பாடியை எடுத்து சென்றார்கள். ஆம்புலன்ஸ் வரும்போது நீங்கள் எத்தனை நபர்கள் இருந்தீர்கள் என்றால் ஒரு கும்பல் சேர்ந்துவிட்டது. காவல் துறையினர் இரண்டு முறை விசாரிக்கும்போது நாங்கள்தான் ஆம்புலன்ஸ்க்கு போன் செய்து வரச்சொன்னோம் என்றும், நானும், மோகன்ராஜ், பெரியசாமியும் மற்றவர்களும் சேர்ந்து ஆம்புலன்ஸ்சில் ஏற்றிவிட்டோம் என்று எழுதியுள்ளது பொய் என்று சொன்னால் ஞாபகம் இல்லை, அங்கிருந்தவர்கள்தான் ஆம்புலன்சில் ஏற்றிவிட்டார்கள். கும்பலாக இருந்தவர்கள் எத்தனை நபர்கள் என்றால் கும்பலாக இருந்தார்கள், அவர்களை நான் எண்ணவில்லை. ஆம்புலன்ஸ்

வரும்போது உடலை ஏற்றி செல்லும்போது இருந்தவர்கள் எங்கள் ஊர் மக்கள் என்றால் ஊர்க்காரர்களும் இருந்தார்கள், போக வரும் மக்களும் இருந்தார்கள். ஆம்புலன்ஸ் போனபிறகு நீங்கள் எவ்வளவு நேரமாக இருந்தீர்கள் என்றால் 5 நிமிடத்தில் நாங்கள் ஆம்புலன்ஸ் பின்னால் சென்றோம். காவல் துறையினர் உங்களை விசாரிக்கும்போது முதல் விசாரணையில் சொன்னதுபோல் தெற்கே இருந்து வந்த வண்டி வளைந்து வந்து ஜெகநாதன்மீது மோதியது என்று நீங்கள் காவல்துறை விசாரணையில் சொல்லவில்லை என்று சொன்னால் காவல் துறையினர் கேட்கவில்லை. வளைத்து அடித்து ஜெகநாதனை தூக்கி அடித்தது, இருசக்கர வாகனம் டிச்சில் மாட்டிக்கொண்டது, ஜெகநாதன் வண்டி பனெட் மீது சிக்கிக்கொண்டார், வண்டியை நிப்பாட்டி அதன்பின்பு மீண்டும் வண்டியை இயக்கி 6, 7 வேலிக்கற்களை அடித்து வந்து தூள் சண்முகம் காட்டிற்குள் ஜெகநாதன் குப்புற விழுந்துவிட்டார், தூள் சண்முகம் காட்டில் ஜெகநாதன் விழுந்தபிறகு மீண்டும் ஜெகநாதன் மீது ஏற்றி சிறுது தூரம் பிக்கப் வண்டியை இயக்கினார்கள், மீண்டும் அவர்கள் வண்டியை இயக்க முற்பட்டபோது அவர்கள் வண்டியை இயக்கவிடாமல் தடுத்தேன், வண்டியில் இருந்த இருவர் கிழக்கே பார்த்து ஓடிவிட்டார்கள் என்ற விபரத்தை நீங்கள் காவல் துறையினர் இருமுறை விசாரித்தபோதும் கூறவில்லை என்று சொன்னால் ஞாபகம் இல்லை. காருடையாம்பாளையத்திலிருந்து குப்பத்திற்கு செல்லும் தென்வடல் ரோடு

துாள் சண்முகம் காட்டிற்கு பக்கத்தில் மட்டும் அந்த ரோடு லேசாக கிழக்கு பக்கமாக வளைந்து செல்கிறது என்று சொன்னால் இல்லை. மேற்சொன்ன இடத்தில் ஒரு வளைவு உள்ளது என்றும், நீங்கள் அதனை தெரிந்துகொண்டே வேண்டுமென்றே தற்போது மறுக்கிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல. பிக்கப் வண்டியில் வலதுபக்கம் பனெட்டில் ரத்தம் பரவலாக இருந்தது என்றும், என் மாமா மற்றும் மற்ற சொந்த பந்தங்களுக்கு நான் போன் செய்தேன் என்றும், ஆம்புலன்ஸ்க்கு யார் போன் செய்தது என்று தெரியாது என்று நீங்கள் இந்த நீதிமன்றத்தில் சொன்ன சங்கதிகளைபோல் காவல் துறை விசாரணையில் அதற்கு மாறாக சொல்லியுள்ளீர்கள் என்றால் சரியல்ல. ஆம்புலன்ஸ் மூலம் இறந்த ஜெகநாதன் பிரேதத்தை கரூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம் என்று காவல் துறையினர் விசாரணையில் சொல்லிவிட்டு, தற்போது உண்மைக்கு புறம்பாக சொல்லுகிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல. வாந்தி எடுத்ததாக சொல்வது எந்த இடத்தில், எந்த டீ கடையில் டீ குடித்தீர்கள் என்ற விபரத்தை காவல் துறை விசாரித்தபோது கூறவில்லை என்று சொன்னால் ஞாபகம் இல்லை. கரூர் அரசு மருத்துவமனை என்பது ஈஸ்வரன் கோவில் அருகில் உள்ளது என்றால் காந்திகிராமத்தில் பெரிய அரசு மருத்துவமனை உள்ளது. காந்திகிராமத்தில் உள்ள மருத்துவ கல்லுாரியுடன் சேர்ந்த மருத்துவமனை உள்ளது என்றால் சரிதான். 2023 ஆம் ஆண்டு வரை ஈஸ்வரன் கோவில் சன்னதி தெருவில் கரூர் அரசு

மருத்துவமனை இருந்தது என்று சொன்னால் நாங்கள் காந்திகிராமம் மருத்துவமனைக்குதான் சென்றோம். நாங்கள் போனோம், அங்கு இறந்தவர் உடல் இல்லை என்றும், வேலாயுதம்பாளையம் அரசு மருத்துவமனைக்கு சென்றோம், அங்கும் இல்லை, மீண்டும் திரும்பி வந்தபோது அரசு மருத்துவமனையில் உடல் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்ற விபரங்களை காவல் துறையினர் உங்களை விசாரித்தபோது கூறவில்லை என்று சொன்னால் சரியல்ல. துாள் சண்முகம் காட்டில் நடந்த சம்பவயிடத்தில் இருந்து எவ்வளவு துாரத்தில் துாள் சண்முகம் வீடு உள்ளது என்று சொன்னால் அரை கி.மீ. தொலை இருக்கும், நடந்து வந்தால் 10-20 நிமிடம் ஆகும். துாள் சண்முகம் இருசக்கர வாகனம் வைத்துள்ளார். துாள் சண்முகம் இரண்டு முறை குண்டர் சட்டத்தில் சிறையில் இருந்த நபர் என்றால் தெரியாது. துாள் சண்முகம் நாங்கள் இருக்கும்போதே வந்துவிட்டார் என்றால் வந்துவிட்டார். துாள் சண்முகம் வந்து எவ்வளவு நேரத்தில் காவல் துறையினர் வந்தார்கள் என்றால் காவல் துறையினர் வரவில்லை. துாள் சண்முகத்தை அந்த பகுதியில் உள்ள நபர்களுக்கு நன்றாக தெரியும் என்றால் சரிதான். நீங்கள் சொல்வதுபோல் உங்கள் கண் முன்பாக எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்று சொன்னால் சரியல்ல. இது ஒரு விபத்தாக நடந்த பிறகு அந்த பகுதியை சார்ந்தவர்கள் முதலில் துாள் சண்முகத்திற்கு சொல்லி முதலில் அவர்தான் சம்பவயிடத்திற்கு வந்தார் என்று சொன்னால் சரியல்ல. துாள் சண்முகம் வருவதற்கு முன்பே காவல் துறையினருக்கு தகவல்

கொடுத்துவிட்டர்கள் என்று சொன்னால் அது எனக்கு தெரியாது. க.பரமத்தி காவல் நிலையம் சம்பவயிடத்தில் இருந்து 8 கி.மீ. தொலைவு இருக்கும் என்றால் சரிதான். என் வீட்டிலிருந்து சம்பவயிடம் 1 ½ கி.மீ. இருக்கும். நீங்கள் சம்பவத்தை கேள்விபட்டுதான் வந்தீர்கள் என்றும், நீங்கள் கண்ணுற்ற சாட்சியல்ல என்றால் சரியல்ல, நான் சம்பவத்தை நேரில் பார்த்தேன். சம்பவத்தை பார்த்த சாட்சி வேண்டும் என்பதற்காக உங்களை ஜோடித்து இந்த வழக்கில் சாட்சியாக காவல் துறையினர் போட்டுள்ளார்கள் என்று சொன்னால் சரியல்ல. அதனால்தான் நீங்கள் முதலில் ஆம்புலன்ஸ் ஏற்றிவிட்டோம் என்று சொல்லிவிட்டு தற்போது அது தவறாக இருக்கின்ற காரணத்தினால் மீண்டும் புதுத்தகவல் உங்களுக்கு சொல்லிக்கொடுத்துவிட்டு நீங்கள் அந்த ஆஸ்பத்திரிக்கு. சென்றோம், இந்த ஆஸ்பத்திரிக்கு சென்றோம் என்று தவறாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல. துாள் சண்முகம் சம்பவயிடத்திற்கு வருவதற்கு முன்பாக காவல் துறையினருக்கு தகவல் கிடைத்து அவர்கள் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்துவிட்டார்கள் என்றால் சரியல்ல. அரசு மருத்துவமனையில் பெயர், முகவரி தெரியாத நபர் என்பதால்தான் ஆண் பிணம் என்று விபத்து பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. அந்த மாதிரி அரசு பதிவேட்டில் தவறாக உள்ளது என்பதை தெரிந்துகொண்டுதான் தற்போது மாற்றி ஆலோசனை வழங்கப்பட்டப்படி தற்போது சொல்கிறீர்கள் என்றால் சரியல்ல. உங்களுக்கு வழக்கைப்பற்றி எப்படி சொல்லவேண்டும்

என்று உங்கள் நண்பர் மோகன்ராஜ் ஒரு வழக்கறிஞரை நியமித்து அவர் வாயிலாக உங்களுக்கு சொல்லிக்கொடுக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. நீங்கள் மோகன்ராஜ், பெரியசாமி ஆகியோர்கள் சம்பவத்தில் ஒன்றாக இருந்தீர்கள் என்றால் சரிதான், அவரவர் உறவினர்களுக்கு போன் செய்தோம். மூவரும் பக்கம் பக்கமாகதான் இருந்தோம். நீங்கள் மூன்று பேரும் இந்த வழக்கை வலுப்படுத்துவதற்காக ஏற்படுத்தப்பட்ட சாட்சிகள் என்று சொன்னால் சரியல்ல. நீங்கள் சொன்னபடி, சொன்ன விதத்தில், சொன்ன நேரத்தில், சம்பவம் ஏதும் நடைபெறவில்லை என்று சொன்னால் சரியல்ல. நீங்கள் கேள்விப்பட்டுதான் சம்பவயிடத்திற்கு வந்தீர்கள் என்றும், சம்பவயிடம் செல்லும்போது உடல் அகற்றப்பட்டுவிட்டது என்று சொன்னால் சரியல்ல. 2 ஆம் எதிரி செல்வகுமார் கிரசர் நடத்தி வருவதால் ஆடு, மாடுகள் மேய்ப்பதற்கு இடையூறாக உள்ளது என்றும், புகை அடிப்பதால் விவசாயம் பாதித்தால் அவர்களுக்கு இடையே பிரச்சனை இருந்தது என்று காவல் விசாரணையின்போது கூறவில்லை என்று சொன்னால் சரியல்ல. 2019 ஆம் வருடம் ஜெகநாதன் கை, கால்களை உடைத்துவிட்டார் என்று ஒரு வழக்கு பதியப்பட்டுள்ளதா, இரண்டு வழக்கு பதியப்பட்டுள்ளதா என்று உங்களுக்கு தெரியுமா என்றால் எனக்கு ஒரு வழக்குபோட்டதுதான் தெரியும்.

முடியும் நேரம் **4.40** மணி

<u>**3** ஆம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் 10.09.2022 ஆம் தேதிக்கு முன்னர் 3 ஆம் எதிரி ரஞ்சித்குமாரை பார்த்துள்ளீர்களா என்றால் பார்த்துள்ளேன். அதற்கு முன்பு எவ்வளவு நாட்களுக்கு முன்னர் பார்த்துள்ளீர்கள் என்றால் அடிப்பதற்கு முந்தைய தினம் நான் 3ம் எதிரியான ரஞ்சித்குமாரை பார்த்துள்ளேன். குவாரியில் வைத்து பார்த்துள்ளேன். நீங்கள் 3 ஆம் எதிரியை பார்க்கவில்லை என்றும், வழக்கிற்காக பார்த்துள்ளதாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல. 3 ஆம் எதிரியை சம்பவ தினத்திற்கு முன்பு உங்களுக்கு தெரியாது என்று சொன்னால் சரியல்ல.

<u>முடியும் நேரம் **4.45** மணி</u>

ஒம்/.K.H.இளவழகன்
முதன்மை மாவட்ட நீதிபதி,
கரூர்.